

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, நேற்று (31.01.2026) இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே. சேகர்பாபு, திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு 66, கொளத்தூர், எஸ்.ஜே.அவென்யூ, எவர்வின் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில், ”உலகம் உங்கள் கையில்" எனும் மாபெரும் திட்டத்தின் கீழ் கபாலீஸ்வரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மூன்றாம் ஆண்டு பயிலும் 186 மாணவ, மாணவியருக்கு மடிக்கணினிகளை வழங்கினார். இந்நிகழ்வில் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை ஆணையாளர் பி.என்.ஸ்ரீதர், மத்திய வட்டார துணை ஆணையாளர்.எச்.ஆர்.கௌஷிக், மண்டலக் குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ் குமார், கல்லூரி முதல்வர் திருமதி சி.லலிதா, மாமன்ற உறுப்பினர்கள் திருமதி யோகப்பிரியா, எ.நாகராஜன், திருமதி பி.அமுதா மற்றும் அலுவலர்கள், மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி மாநகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 41 தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் குடியிருப்பு நிலையம் தொடக்கப்பள்ளி எதிரில் வார்டு எண் 35 அருந்ததிபுரம் ஆகிய பகுதியில் ஆவடி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து 26 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் புதிய நியாய விலை கடையை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் திறந்து வைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு ரேஷன் பொருட்களை வழங்கினார். உடன் ஆவடி மாநகராட்சி மேயர் உதயக்குமார் ஆணையர் சரண்யா மண்டல குழு தலைவர்கள் ஜி.ராஜேந்திரன், அமுதா பேபி சேகர், ஜோதி லட்சுமி, மாநகர பொறுப்பாளர் சண் பிரகாஷ் பகுதி கழகச் செயலாளர்கள் ஜி.நாராயணபிரசாந்த், பொன்விஜயன், வழக்கறிஞர் வினோத், கவுன்சிலர்கள் கீதா யுவராஜ், சாந்தி பாண்டியன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### கோவி.லெனின் – எஸ்.முரளி ஆலோசனை!

# மயிலை 171 (அ) வட்டக் கழக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்!

### வட்டக் கழக செயலாளர் பா.பொன்னுசாமி அறிக்கை!

சென்னை, பிப்.1-

171 (அ) வட்டக் கழக செயலாளர் பா.பொன்னுசாமி விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. ஆலோசனைப்படி 171 (அ) வட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் இன்று (01.02.2026 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 6.30 மணியளவில் சீனிவாசபுரம் வட்டக்கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது.

தொகுதி பார்வையாளர் கோவி.லெனின், பகுதி செயலாளர் எஸ்.முரளி ஆகியோர் ஆலோசனை வழங்குகிறார்கள்.

இந்த ஆலோசனை கூட்டத்திற்கு வட்டக்கழக நிர்வாகிகள், BLA2, BDA, BLC, தகவல் மற்றும் அனைத்து அணிகளின் நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பித்திட கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : கழக ஆக்கப் பணிகள் குறித்து

இவ்வாறு வட்டக் கழக செயலாளர் பா.பொன்னுசாமி அறிக்கை விடுத்துள்ளார்.

### விரைவில் மூவர் குழு அறிக்கை வெளியிட இருக்கிறது – ஊதியப் பிரச்சினை சார்ந்த முடிவு எடுக்கப்படும்!

# இடைநிலை ஆசிரியர்கள் பள்ளிக்குத் திரும்பி கற்பித்தல் பணியில் ஈடுபடவும்!

### பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கை!

சென்னை, பிப்.1-

பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

விரைவில் மூவர் குழு அறிக்கை வெளியிடப்பட இருக்கின்றது. அதனடிப்படையில் இடைநிலை ஆசிரியர்களது ஊதியப்பிரச்சினை சார்ந்த முடிவு எடுக்கப் படும்.



போராட்டக்களத்தில் இருக்கும் ஆசிரியர்கள் பள்ளிக்கு திரும்பி கற்பித்தல் பணிகளில் ஈடுபடக் கேட்டுக் கொள்கின்றேன்.

இது நம்முடைய அரசு என முதல்வரின் மீது நம்பிக்கை வைத்து போராட்டங்களில் ஈடுபடாமல் மாணவர்களது கற்றல் பாதிக்கப்படாமல் பள்ளிக்குத் தொடர்ந்து சென்று கற்பித்தல் பணிகளில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப் பட்டுள்ளேன்.

மொத்தமுள்ள இடைநிலை ஆசிரியர்களில் பள்ளிப் பணிகளுக்கு செல்லாமல் இருக்கின்ற 5781 ஆசிரியர்களையும் கற்பித்தல் பணிக்கு திரும்ப கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

### அமைச்சர் பி.மூர்த்தியின் பிரமாண்ட ஏற்பாட்டில் – மதுரை வடக்கு மாவட்டத்தில் தொகுதி வாரியாக ஜல்லிக்கட்டு!

# மேலூர் தொகுதி சார்பில் மாபெரும் ஜல்லிக்கட்டு விழா!

### அலங்கா நல்லூர் கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கில் நடைபெற்றது! மாணவ – மாணவியர் திரளாகக் கண்டுகளித்தனர்!









கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாளை முன்னிட்டு மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஏற்பாட்டில் தமிழர்களின் பாரம்பரியமிக்க வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு போட்டிக்கு பெருமைச் சேர்க்கும் வகையில் சட்டமன்றத் தொகுதி வாரியாக அடுத்தடுத்து ஏழு ஜல்லிக்கட்டு விழா நடைபெற்று வருவதின் ஒரு பகுதியாக மதுரை மேலூர் சட்டமன்றத் தொகுதிக்கான ஜல்லிக்கட்டுப் போட்டி அலங்காநல்லூர் கீழக்கரை கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கில் பிரம்மாண்டமாக நடைபெற்றது. இவ்விழாவில் மாவட்ட துணைச் செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ. மற்றும் மதுரை மேலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய மற்றும் நகர்க் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அரசு அதிகாரிகள், ஜல்லிக்கட்டு காளை உரிமையாளர்கள், மாடுபிடி வீரர்கள், ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பங்கேற்றனர். மேலும் நேற்றைய ஜல்லிக்கட்டு போட்டியை காண சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பள்ளிக் கல்லூரி மாணவ, மாணவிகள் வருகைபுரிந்தனர், உற்சாக மிகுதியுடன் ஜல்லிக்கட்டை கண்டு மகிழ்ச்சி ஆரவாரம் செய்த மாணவர்களுடன் அமர்ந்து அமைச்சர் பி.மூர்த்தியும் ஜல்லிக்கட்டுப் போட்டியை கண்டுகளித்தார்.